Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 189/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW8 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சுரேந்திரநாத் |
| Father's Name | – | வீராச்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 08th June 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

**முதல் விசாரணை** :

நான் தற்போது செங்குட்டுபாளையத்தில் குடியிருந்து கொண்டு ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். நான் இதற்கு முன்பு 2017 - 2018 ம் ஆண்டு யூனிகாஸ்ட் கம்பெனியில் ஓட்டுநராக பணியாற்றி வந்தேன்.

கடந்த 12.04.2017 ம் தேதி மாலை 04.00 மணியளவில் ஆச்சிபட்டியில் இருந்து குள்ளக்காபாளையம் செல்லும் வழியில் உள்ள யூனிகாஸ்ட் கம்பெனியில் கட்டிடத்தில் சிமெண்ட் சீட் பொருத்தி கொண்டிருந்த நபர் கீழே விழுந்து விட்டதாகவும், அவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவேண்டும் என்று சொன்னதால் கேரளாவினை சேர்ந்த பிரதீஷை நான் என்னுடைய ஜீப்பில் வைத்து பொள்ளாச்சி ஆராதனா மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு வந்தேன்.

அவருக்கு தலையில் அடிப்பட்டிருந்ததால் பொள்ளாச்சிஅரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல சொன்னதால் நான் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அவரை கொண்டு சென்றேன். நான் மருத்துவமனையில்சேர்த்துவிட்டு வெளியில் காத்திருந்தேன். அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதியை தான் போலிசார் விசாரணையிலும் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் நான் இல்லை. கம்பெனியின் உள்ளே தான் இருந்தேன். சம்பவத்திற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam B.A.,B.L.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 189/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW9 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | செந்தில்குமார் |
| Father's Name | – | கோபால் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 08$^{th}$ June 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

**முதல் விசாரணை :**

நான் தற்போது வேடிநகரில் குடியிருந்து கொண்டு ஆச்சிபட்டி அருகே உள்ள யூனிகாஸ்ட் நிறுவனத்தில் காசாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.04.2017 ம் தேதி பாஸ்கரன் என்பவர் கம்பெனியில் சிமெண்ட் சீட் போட்டு கொண்டிருந்தார். அப்போது அங்கு வேலை பார்த்து கொண்டிருந்த இருவர் கீழே விழுந்து விட்டனர்.

கீழே விழுந்த ஒருவருக்கு எலும்பு முறிந்து வாயில் இரத்தம் வந்துக்கொண்டிருந்தது. அவரை பொள்ளாச்சி ஆராதனா மருத்துவமனைக்கு அழைத்து வந்து, முதலுதவி செய்துவிட்டு, பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அடிப்பட்ட இருவரில் ஒரு நபர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன்.

மறுநாள் காலை பொள்ளாச்சி தாலூக்கா காவல்நிலைய காவல் உதவி ஆய்வாளர் மற்றும் காவலர் காலை 07 – 08.00 மணிக்குள் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தார்கள்.

தற்போது என் முன் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.3** ஆகும். போலிசார் சம்பவம் குறித்து என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் 03.00 -04.00 மணிக்குள் நடந்தது. இருவரில் யார் இறந்தார்கள் என்று தெரியாது என்றால் சரிதான், தற்போது அவர்களது பெயர் மறந்துவிட்டது, அவர்களது பெயர் முரளிதரன் மற்றும் பிரதீஷ் என்று எனக்கு நியாபகம். இருவரில் யார் இறந்தார் என்று தற்போது நியாபகம் இல்லை.

மறுநாள் நான் காவல்நிலையம் வந்தேனா என்றால் இல்லை. போலிசார் தான் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். பார்வை மகஜர், மாதிரி வரைபடங்களை காவல்நிலையத்தில் வைத்து தான் வரைந்தார்கள் என்றால் சரியல்ல, சம்பவயிடத்தில் வைத்து தான் வரைந்தார்கள்.

வழக்கில் இறந்தவரை காப்பாற்ற வேண்டி காவல்நிலையத்தில் வைத்து கையொப்பமிட்டு விட்டு தற்போது பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam B.A.,B.L.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.